**கடுவெல மாநகர சபை - 2022**

--------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுவெல மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கடுவெல மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு கொள்கைகள்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் - 2017 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொடர்புடைய பிரிவின் பிரகாரம் ரூபா 515 மில்லியன் பெறுமதியான 12 மாதங்களுக்கு குறைவான நிலையான வைப்புக்கள் நடைமுறைச் சொத்தாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி திணைக்களத்தின் பயிற்சி அமர்வுகளின் போது வழங்கப்பட்ட மாதிரிகள் மற்றும் ஆலோசனையின் பிரகாரம் நிலையான வைப்பு பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களை கருதி சொத்துக்கள் வகைப்படுத்தலின் கீழ் சமர்ப்பிப்பதற்கு எதிர்வரும் நிதியாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் வகைப்படுத்தல் நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடுவெல மாவட்ட அலுவலகத்தை திருத்துதல் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 6,000,000 மதிப்பீட்டு பெறுமதியான திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் ஏற்பாட்டின் மூலம் செலவிடப்பட்ட செலவினத்தின் தன்மையினை கண்டறிந்து நாட்குறிப்புக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வீதிகள், மதகுகள், சிறு வீதிகளின் பெறுமானத் தேய்வு ரூபா 20,243,202 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 28,449,065 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 8,205,863 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய வழுக்கள் நாட்குறிப்பு இலக்கம் 02 இன் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 10 படகுகளுக்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 6,112,871 தொகை மோட்டார் படகு கணக்கில் வரவு வைத்து கடன்கொடுத்தோராக பதியப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டின் போது அதற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 4,737,939 ஆகும். அதன் பிரகாரம் மோட்டார் படகு கணக்கு ரூபா 1,374,932 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்தலாக கருதி 2022 ஆம் ஆண்டின் பெறுமானத் தேய்வான ரூபா 80,349 பதிவழிக்கப்பட்டதன் காரணமாக மிகை அப்பெறுமானத்தால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய கணக்கீட்டு வழுக்கள் நாட்குறிப்பு இலக்கம் 2.2, 2.3 இன் கீழ் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 395(இ) | அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்க கூற்று தயாரிக்க வேண்டிய போதிலும், சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறித்துரைத்த திகதியில் வங்கி இணக்கக் கூற்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் குறித்துரைத்த திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு வங்கி கணக்குகளுக்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட போதும், கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சியிருந்த ரூபா 1,779,646 பெறுமதியான 10 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காசோலைகளுக்காக உரிய நிறுவனங்களுக்கு அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், இலக்கம் 465209, 465348 மற்றும் 464636 என்ற காசோலைகளுக்காக பதில் காசோலைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 243,511,413 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 622,069,391 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க வங்கியொன்றின் நடைமுறைக் கணக்கில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் செயற்பாடற்ற நிலையில் காணப்படுவதுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 600,353 ஆகும். | 2006 ஆகஸ்ட் மாதத்தின் போது வங்கியின் கணனி முறைமையை மாற்றும்போது யூலை 30 இல் உள்ளவாறு மீதி மற்றும் 2006 ஆகஸ்ட் 01 இல் உள்ளவாறு நடைமுறைக் கணக்கின் மீதிகளுக்கு இடையே இனங்காணப்படாத ரூபா 14,250 கொடுப்பனவு இது | மீதிகளை தீர்த்து வைத்தல் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

வரை தீர்த்து வைப்பதற்காக காணப்படுகின்றமையால் அதனை தீர்த்து வைக்கும் வரை கணக்குகளை மூடுவதற்கு முடியாதிருந்தது.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

நகர பிதாவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 |
| (i) | ஆதன வரியும் வரியும் | 232,845 | 240,489 | 230,022 | 10,467 | 204,861 | 262,138 | 243,579 | 18,559 |
| (ii) | வாடகை | 26,714 | 20,355 | 20,611 | (255) | 24,325 | 14,515 | 16,118 | (1,603) |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 16,653 | 19,991 | 20,170 | (179) | 7,110 | 24,594 | 13,930 | 10,663 |
| (iv) | ஏனைய வருமானம் | 992.930 | 1,084,801 | 1,084,801 | - | 292,241 | 1,076,142 | 1,076,142 | - |
| | மொத்தம் | 1,269,142 | 1,365,636 | 1,355,604 | 10,033 | 528,537 | 1,377,389 | 1,349,769 | 27,619 |

**2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல வருடங்களாக கொண்டுவரப்படுகின்ற அறவிட வேண்டியது ரூபா 71,095,083 ஆக இருந்தது. | 2022.12.31 இல் உள்ளவாறு ஆதன வரி நிலுவை மீதி ரூபா 87,698,635 தொகையில் மேலும் கிடைக்க வேண்டிய தொகை ரூபா 71,095,083 ஆகும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபை அதிகார பிரதேசத்திற்குரிய சினிமா மண்டபங்கள் இரண்டில் இருந்து சில வருடங்களாக கொண்டு வரப்படுகின்ற கிடைக்க வேண்டிய களியாட்ட வரி வருமானம் ரூபா 5,318,936 ஆகும். | இந்த நிலுவை பணத்திற்காக கடுவெல மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை வருமானம் ரூபா 5,725,434 தொகையை அறவிடுவதற்கு சபை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022.12.31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை மாதாந்த வாடகை தொகை ரூபா 5,725,434 ஆகும். நிலுவை பணம் 03 மாதங்களை விஞ்சியுள்ள மாதாந்த கடை வாடகை காணப்படுகின்ற கடைகளை முத்திரை வைத்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்து ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 28,719,924 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,057,844,911 ஆகும். | கிடைக்க வேுண்டிய பணம் தொடர்பாக நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பிரதி செய்து வருமான இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 சனவரி முதல் செப்டம்பர் வரை திட்டமிடல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு இடையே கடுவெல, பத்தரமுல்ல, அத்துருகிரிய அலுவலகங்களில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்ப பத்திரங்கள் 355 ஆகும். | திட்டமிடல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்காக குழுவில் இருந்து வழங்கப்பட்ட குறைபாடுகள் விண்ணப்ப தாரர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும், விண்ணப்பதாரர்களால் உரிய குறைபாடுகளை சரிசெய்து சமர்ப்பிக்காமையின் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டிருந்தது. | பின்தொடர் நடவடிக்கைகளை செய்து முறைப்பாடுகளை தீர்த்து வைத்தலை விரைவுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட வீதிகள், மதகுகள், சிறு வீதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட வீதிகள், மதகுகள், சிறு வீதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்து போதிலும், GIS மென்பொருள் ஊடாக நாளது வரையாக்கப்படுகின்றது. | அந்த சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதை விரைவுபடுத்துதல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 05 ஆம் திகதி கேள்வி நடைமுறைகளுக்கு புறம்பாக முறையான உடன்படிக்கையோ அல்லது மாதாந்த வாடகையோ அறவிடல் இன்றி சபை வளவில் நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை உரிமையாளருக்கு நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறே அந்த வளவில் நீர் மற்றும் மின்சார பட்டியல்களும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 08 மாத காலத்தில் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன், அந்த கட்டிடத்தை பராமரிப்பதற்கான செலவின பொறுப்பொன்றை செய்வதற்கு சபைக்கு ஏற்பட்டிருந்தது. | மாநகர சபை கட்டிடத்தின் சிற்றுண்டிச் சாலைக்காக அது நடாத்திச் செல்லப்படுகின்ற தரப்பினரால் நீர், மின்சார பட்டியல்கள் செலுத்த வேண்டும் எனவும், மாதாந்த வாடகை பணமாக ரூபா 15,000 தொகையை அறவிடுவதற்கும் இந்த அறவீடுகள் 2023 மே மாதம் முதல் அமுல்படும் வகையில் வழங்குவதற்கும் அதன் பிரகாரம் மூன்று மாத கால எல்லைக்காக இந்த சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்லும் தேவை இந்த தரப்பினருக்கு வழங்குவதற்கும் 2023 மே மாதம் 12 ஆம் திகதிய 2023/01/ப/தீர்மான இலக்கம் 178 நிர்வாக குழு தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சபைக்கு இழக்கப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். குழு தீர்மானத்தை விரைவாக அமுல்படுத்துதல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2022 ஆம் ஆண்டின் சனவரி முதல் யூலை மாதம் வரை ரன் பெலெஸ்ஸ கழிவுப் பொருள் தளத்தில் கழிவுகளை போக்குவரத்து செய்வதற்காக ரூபா 25,316,868 கிரயமொன்று | நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வாகனங்களை ஈடுபடுத்துதல் | பெறுகை நடைமுறைகளை பின்பற்றி உடன்படிக்கை செய்வதை விரைவுபடுத்துதல் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் கூறுவிலை கோராமல் முன்னைய ஆண்டின் கழிவுப் பொருள் போக்குவரத்து செய்த நிறுவனத்தின் மூலம் இந்த சேவை பெறப்பட்டிருந்தது. இதற்காக 2022 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்படாதிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டின் உடன்படிக்கையின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் பெறப்பட்டிருந்தது. | வரையறுக்கப்பட்டமை, நாளாந்தம் கழிவுப் பொருட்களை அகற்றும் நடவடிக்கைகள் வசதியீனமாக இருந்ததன் பிரச்சினைகளுடனான நிலைமைக்கு உட்பட்டிருந்தமையாலும், பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் 2021 ஆம் ஆண்டின் உடன்படிக்கைகளில் உரிய சேவை மேற்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எரிபொருள் விலை மற்றும் ஏனைய பொருட்களின் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக கழிவுப் பொருட்களை அகற்றுகின்ற தரப்பினர் சேவையை வழங்குதல் வசதியீனமாக இருந்தமையால் அந்த தரப்பினரின் கோரிக்கையின் படி விலை சூத்திரத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவிநிலை தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 36 சதவீதம் அதாவது அங்கீகரிக்கப்பட்ட 14 பதவிகளில் 05 உம் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | பதவி நிலை உத்தியோகத்தர் பதவி வெற்றிடம் தொடர்பாக மாதாந்த மற்றும் மும்மாத அறிக்கை மூலம் பிரதம செயலாளருக்கு அறிவிக்கப்பட்ட போதும், இது வரையிலும் அந்த வெற்றிடம் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்புதலை விரைவுபடுத்துதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் நலன்புரி சேவைகளின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் சமூக நலன் நடவடிக்கைகளில் ‘‘விளையாட்டின் மூலம் | மாநகர சபையின் விளையாட்டு சமூகமொன்று ஸ்தாபிக்கப்பட்ட போதும் கொரோனா தொற்று நோய்க்கு உரியதாக | செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்கினை அடைந்து |

| | | |
|---|---|---|
| ஆரோக்கியமான வளம்மிக்க மக்களை உருவாக்குதல்’’ மற்றும் ‘‘விளையாட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை’’ அமுல்படுத்துதல் 05 சதவீதம் ஆன குறைந்த நிதிசார் செயல் முன்னேற்றத்தை பெற்றிருந்தது. | விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் விளையாடுதல் மற்றும் ஒன்று கூடுதல் தடை செய்யப்பட்டமையினால் விளையாட்டு சங்கங்களை முன்கொண்டு நடாத்திச் செல்வதற்கு முடியாதிருந்தது. | கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |